**DEPOSITION OF WITNESS**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.II, MAYILADUTHURAI**
**CC. CASE NO. 19/2024**

Deposition of LW9 Examined as PW7 Date 23.02.2026

| | |
|---|---|
| Name | மானேன்மணி (Sub-Inspector of Police, Mayiladuthurai Railway) |
| Husband's Name | ராஜாராமன் |
| Village | இருப்புபாதை காவல்நிலையம், மயிலாடுதுறை |
| Taluk | மயிலாடுதுறை |
| Age | 56/2026 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day 23.02.2026

(Accused called absent. U/s. 355 of BNSS petition filed and allowed.)

**முதல் விசாரணை**

நான் தற்போது மயிலாடுதுறை ரயில்வே காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 08.10.2023 ம் தேதி சிறப்பு உதவி ஆய்வாளர் செல்லப்பன் நிலைய அலுவலில் இருந்த போது லஷ்மண் லால் மீனா மகன் சஞ்சய் குமார் மீனா என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகார் மனுவை பெற்று மயிலாடுதுறை இருப்புபாதை காவல்நிலையம் குற்ற எண். 37/2023 இதச பிரிவு 294(b), 506(2) ன் கீழ் பதிவு செய்து முதல் தகவல் அறிக்கையை பதிவு செய்துள்ளார். **இந்த புகார் மனு அ.சா.ஆ. 6 ஆகவும், முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ. 7 ஆகவும், குறியீடு செய்யப்படுகிறது.** பின்னர் சம்பவ இடம் சென்று பட்டியல் சாட்சிகள் 1 முதல் 3 வரையிலானவர்களையும் விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். சம்பவ சாட்சிகள் ராகிராஜ், மணிமாறன் ஆகியோரர் முன்னிலையில் சம்பவஇடத்தை பார்வையிட்டு பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடத்தினை தயார் செய்தேன். **அந்த பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் முறையே அ.சா.ஆ.8, அ.சா.ஆ.9 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** பட்டியல் சாட்சிகளை விசாரணை செய்ததில் சம்பவம் உண்மை என தெரிய வந்து எதிரியை தேடி வந்த நிலையில் எதிரி மாண்பமை மாவட்ட அமர்வு நீதிமன்றத்தில் முன்பிணை பெற்றுவிட்டபடியால் எதிரியை கைது செய்ய இயலவில்லை. மேற்கண்ட சம்பவ சாட்சிகள் முன்னிலையிலேயே குற்ற சம்பவத்திற்கு பயன்படுத்தப்பட்ட வழக்கு தடயபொருட்களை கைப்பற்றுதல் மகசர் தயார் செய்து கைப்பற்றினேன். **கைப்பற்றுதல் அ.சா.ஆ.10 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** கைப்பற்றப்பட்ட வழக்கு தடய பொருட்களை படிவம் 91ன் மூலமாக நீதிமன்றத்தில் ஆஜர் செய்தேன். **படிவம் 91 அ.சா.ஆ.11 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. வழக்கு சம்பவத்தை வீடியோ பதிவு செய்து அதனை குறுந்தகடு மற்றும் புகைப்பட எண்ணிக்கை 4 ஆகியவற்றையும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்தேன். **குறுந்தகடு**

23/2/26

**அ.சா.பொ.1 ஆகவும், புகைப்படம் அ.சா.பொ.2 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது.** (அ.சா.பொ.1 குறுந்தகட்டிற்கு இந்திய சாட்சிய சட்டப்பிரிவு 65(b) சான்றிதழ் தாக்கல் செய்யாத காரணத்தால் குறுந்தகட்டை குறியீடு செய்ய கற்றறிந்த எதிரி தரப்பு வழக்கிறிஞர் ஆட்சேபனை செய்தார். மேற்படி ஆட்சேபனைக்கு உட்பட்டு அ.சா.பொ.1 குறியீடு செய்யப்படுகிறது.) பின்னர் எதிரி மீதான விசாரணையை முடித்து கடந்த 07.12.2023 அன்று இதச பிரிவுகள் 294(b), 506(2) ன் கீழும் ஆகிய சட்டபிரிவுகளின் கீழ் குற்ற இறுதியறிக்கை தாக்கல் செய்தேன்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

சொன்ன நேரத்தில் சொன்ன தேதியில் புகார் பெறப்படவில்லை என்றால் சரியல்ல. சொன்ன நேரத்தில் சொன்ன தேதியில், சொன்ன இடத்தில் வைத்து பார்வை மகசர், கைப்பற்றுதல் மகசர், மாதிரி வரைபடம் தயார் செய்யப்படவில்லை என்றால் சரியல்ல. பட்டியல் சாட்சிகளை சரிவர விசாரணை செய்யாமல் எதிரிக்கு எதிராக குற்ற இறுதியறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றாலும் சரியல்ல.

என்னால் எழுதிக்கொள்ளப்பட்டு. எதிரியின் முன்னிலையில் சாட்சிக்கு படித்துக்காட்டப்பட்டு அவரால் சரியானதென்று ஏற்கப்பட்டது.

நீதித்துறை நடுவர் எண்-11
மயிலாடுதுறை